1990 ஏப்ரல் 21]

பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, இந்தச் சட்டக் கமிஷன் அமைக்க வேண்டுமென்ற கோப்பு நகர்த்தப்பட்டு அப்போது முடிவடைந்த நிலையில் இருந்ததாகக் கேள்விப் பட்டேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன கருத்தின் அடிப்படையில் அதை மிக விரைந்து கொண்டுவர முயற்சிகள் எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப் போன்ற ஒரு சட்ட ஆணையம் மத்திய அரசில் இயங்கி வருகிறது. மற்ற மாநிலங்களில் இதுபோன்று இருக்கிறதா என்பதை நாம் கேட்டோம். அப்படிக் கேட்டபோது, மத்தியப் பிரதேசம், ஒரிசா, அசாம், மேற்கு வங்காளம், மகாராஷ்டிரா, சிக்கிம் ஆகிய மாநிலங்களில் மாநில சட்ட ஆணையங்கள் அமைக்கப் பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது. அவைகளைக் கவனத்தில் கொண்டு, நமது மாநிலத்திலும் விரைவாகக் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும்.

திருச்சி மாவட்டத்தைப் பிரித்தல்.

* 448 திரு. ரெ. பிச்சைமுத்து :

திரு. எஸ். டி. உகம்சந்த் :

திரு. ஆர். அறிவழகன் :

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருச்சி மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து பெரம்பலூரைத் தலைநகராகக் கொண்டு திருவள்ளுவர் மாவட்டம் அமைக்கும் செயற்குறிப்பு எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே,

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைப் பிரிப்பது குறித்த வல்லுநர் குழுவின் அறிக்கை பெறப்பட்டுள்ளது. அதை ஆராய்ந்து மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கிற வல்லுநர் அறிக்கை அரசுக்கு வந்திருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதன் விபரம் என்ன? மாவட்டம் எப்போது பிரிக்கப்படும்? மாவட்டம் பிரிக்கப்படுகின்ற நேரத்தில் பெரம்பலூர் நகரத்தில் அமைய

இருக்கிற தலைநகரத்திற்கு வேண்டிய குடிநீர் வசதியும் மற்ற வசதிகளும் செய்து தர அரசிடம் குறிப்பு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

9–25 மணி

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. உகம்சந்த் அவர்கள் கேட்ட கேள்விக்குப் பதில். இந்த மாவட்டப் பிரிவினை குறித்துப் பெறப்பட்ட வல்லுநர் குழுவின் அறிக்கையை ஆராய்ந்து பின்னர் மேல் நடவடிக்கை எடுக்கப்படும். ஆனால் தொடர்ந்து அவர் கேட்ட விளக்கங்களுக்குப் பதில் இல்லை.

திரு. ஆ. அறிவழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, அதிகாரத்தைப் பரவலாக்குவதுதான் வெற்றிகரமான நிர்வாகத் திற்கு அடையாளம். மேலும் ஜனநாயக நாட்டில் ஆட்சி அதிகாரம் மக்கள் இருக்கும் திசை நோக்கிச் செல்ல வேண்டும். அதற்கு இந்த மாவட்டப் பிரிவினை உதவியாக இருக்கும். எனவே கூடிய விரைவில் திருச்சி மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கும் முடிவுக்கு செயல் வடிவம் தரப்படுமா? அப்படிப் பிரிக்கும்போது புதிய மாவட்டத்தில் எந்தெந்த வட்டங்கள் சேர்க்கப்படும் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் ஜனநாயக விளக்கத்திற்கு வாழ்த்து.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இந்த மாவட்டத்தைப் பிரிக்கும்போது பல வட்டங்கள் சேர்கின்றன. அப்படிச் சேர்க்கும்போது துறையூர், அரியலூர், லால்குடி, பெரம்பலூர் போன்றவையும் சேரும். அதிலே பெரம்பலூரைத் தவிர்த்து பாக்கி ஏதாவது இடங்களில் மெய்ன் அலுவலகம் வைக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, வல்லுநர் குழுவின் அறிக்கையை ஆராய்ந்த பின்னர் மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஏற்கெனவே தெரிவித்ததற்குப் பிறகு ஸ்ரீரங்கம் சீற வேண்டிய அவசியம் இல்லை.

திரு. த. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூரில் 50-க்கு மேற்பட்ட அலுவலகங்கள் இருப்பதாலும், அரசுக்குச் சொந்தமான நிலங்கள் வாரண வாசியில் 200 ஏக்கர் நிலம் இருக்கிற காரணத்தால் அரியலூரைத் தலைமையிடமாக வைப்பதா? அல்லது பெரம்பலூரைத் தலைமை

இடமாக வைப்பதா என்று ஒரு போரே நடந்து கொண்டு இருக்கிறது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திட்டவட்டமாக எந்த வட்டத்தில் அது வைக்கப்படும் என்பதை அறிவிக்க இயலுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் போரில் நான் ஈடுபட விரும்பவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தப் போரில் குறைந்தது நடுவராகவாவது இருப்பீர்களா ? (சிரிப்பு).

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூரைத் தலைநகரமாகக் கொண்டு திருவள்ளுவர் மாவட்டம் அமைக்கப்படும் என்று நீண்ட காலத்திற்கு முன்பு அறிவிக்கப்பட்டு இருந்தது. ஆனால் அமைச்சர் அவர்கள் வல்லுநர் குழுவின் அறிக்கையை ஆய்வு செய்ய வேண்டியிருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆய்வு செய்வதற்கு எவ்வளவு நாட்கள்தான் ஆகும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுவார்களா?

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, அது ஆய்வின் அளவைப் பொறுத்தது.

திரு. மொஞ்சனூர் ப. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கிறபோது அந்த மாவட்டத்தில் இரண்டாவது பெரிய நகரமாகவும், தொழில் நகரமாகவும் இருக்கின்ற கரூரைத் தலைமையிடமாகக் கொண்டு மாவட்டம் அமைக்க அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, கேட்ட கேள்வியையே திருப்பித் திருப்பிக் கேட்கும் அவையாக இந்த அவை மாறக்கூடாது என்று நான் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். அது ஆய்வில் இருக்கிறது.

கிராம நிர்வாக அலுவலர்களுக்கு குடியிருப்புகள்.

* 2471 திரு. வெ. இராசு :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கிராம நிர்வாக அலுவலர்களுக்குக் குடியிருப்பு கட்டித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?